# தாய் ஒருத்தி நான் எப்போது உனக்காக இருக்கிறேன் - அன்னை ஸ்ரீ சாரதா தேவி

## முன்னுரை :

அன்னை சாரதாதேவி ஸ்ரீராமகிருஷ்ணர் அவர்களை குருவாக தன் வாழ்க்கை ஒரே வயதில் தொடங்கினார். ஸ்ரீராமகிருஷ்ணர் அவர்களின் முக்கிய சீடர் ஆவார்-சீடர்களில் முக்கியமான இடத்தை வகித்தார். இவர் ராமகிருஷ்ணரின் துணைவி ஆவார். டிசம்பர் 22, 1853 ஜெயராம் பாடி வங்காளத்தில் பிறந்தார். இவரின் இயற்பெயர் சாரதாமணி முகோபாத்யாய என்று அழைக்கப்பட்டார். "தாய் ஒருத்தி நான் எப்போதும் உனக்காக இருக்கிறேன் என்ற தலைப்பில் அன்னையாரின் அன்பு, பொன்மொழிகள், கல்வின் முக்கியத்துவத்தை பெண்களுக்கு புரியவைத்து உணர்த்தினார். "அன்னை அவர்கள் பள்ளிச் சென்று படித்ததில்லை என்ற போதும் அக்காலத்தில்லை தமது சொந்த முயற்சியால் சிறிது படிக்கவும் எழுதவும் கற்றுக்கொண்டார்.

இன்று நீங்கள்
செய்ய இயலாததை
நாளை உங்களால்
நிச்சயம் செய்ய முடியும்
விடா முயற்சியை
மேற்கொள்ளுங்கள்
வெற்றியை எய்துவீர்கள்

## அன்னையாரின் தொடக்ககாலம் :

ராமகிருஷ்ணரின் வாழ்க்கைத் துணைவியாக அன்றும் தமது கணவரை பைத்தியக்காரர் என்று கூறுவதால் வருத்தப்பட்டு அவருக்கு உதவி செய்ய வந்தார். அங்கு ராமகிருஷ்ணரின் ஆன்மிக வாழ்க்கைத் துணையாக அவருக்கும் அவரைக்காண வரும் பக்தர்களுக்கும் சமைத்து அவரது வழிகாட்டுதலில் ஆன்மிக சாதனைகளில் ஈடுபடுவது என்று ஆன்மிகப் பணிகளைச் செய்தார்.

"ஒரு குழந்தையின்
வாழ்க்கையை
ஒளிர செய்யுங்கள்"

ராமகிருஷ்ண இயக்கத்தின் அணிகலனாகத் திகழ்ந்து எளிமையான சீடர்களை அன்பு மிக்க பாதையில் வழிநடத்திய அவரைப் பற்றிய அரிய முத்துக்கள் புத்து கழுத்து வரை நிற்கும் தண்ணீரில் இறங்கி, பசுக்களுக்குப் புல் வெட்டி வருவார். வயலில் வேலை செய்பவர்களுக்கு சாப்பாடு கொண்டுவந்து கொடுப்பார் பருத்தித் தோட்டத்தில் தாயுடன் சேர்ந்து பருத்தி எடுப்பார். பருத்தித் தோட்டத்தில் தாயுடன் ஒருமுறை கடும் பஞ்சம் ஏற்பட்டபோது அப்பா பத்திரப்படுத்தி வைத்திருந்த அரிசியை எடுத்து சமைத்து ஏழைகளுக்குப் பரிமாறி பசியாற்றினார்.

## அன்னை ஸ்ரீ சாரதா தேவியாரின் அன்பு

### ஆதிபராசக்தி அம்பிகையின் திரு அவதாரம்

அன்னை ஸ்ரீ சாரதா தேவியார் இந்த உலகம் பல அவதாரங்களைக் கண்டு இருக்கிறது. அந்த அவதாரங்கள் பலருக்கும் அருள் புரிந்திருக்கிறார்கள். இது பலரும் அறிந்த விஷயம் ஆனால் சாரதா தேவி என்ற அம்மாவாகவே அம்பிகை அவதாரத்தில் பலரும் அறியும் வகையில் அவதரித்தார்!. அம்மாவாக உருவெடுப்பவர்கள் ஒவ்வொருவரும் தன்னையும் மறைத்துக் கொண்டு தன் தலைவனையும் தனது குழந்தைகளின் பெருமைகளையும் மட்டுமே முன் நிறுத்துவார்கள்.

அவள் அருளில் கரையாத பாவங்கள்
இல்லை!
அவள் அன்பில் உயராத பிள்ளைகள்
இல்லை!

அன்னை சாரதை யாரையும் கைவிட்டதாக இதுவரை வரலாறு இல்லை! இனியும் அப்படி ஒரு வரலாற்று ஏடு எழுதப்படப்போவதும் இல்லை. இப்படி தாய்க்குள் ஒரு தெய்வத்தையும் தெய்வமே தாயுருவிலும் வந்து நமது அசிங்கங்களை அருவெறுப்பின்றி அன்புடன் அகற்றும் சாரதாதேவியை "அம்மா" என்று எளிய மந்திரத்தை இனிமையாகக் கூறி அழைத்தால் போதும் அவள் வருவாள்! உடன் அருள் தருவாள்! தரணியின் தூய்மை எல்லாம் தானாக ஒன்று சேர்ந்து உருவம் நிறைந்த தமது பிள்ளைகள் மேல் தாளாத பரிவு கொண்டு தாங்கி நின்று காப்பாள் அவள்.

அன்னையின் அன்பு மொழிகள்
வாழ்க்கை பிரச்சினைகளைத் தீர்க்க
சுலபமானதும் மேலானதுமான வழி
ஆண்டவனின் நாமத்தை மௌனமாக
ஜெபிப்பது.

சோம்பலினால் உடல் மட்டுமல்ல
மனமும் கெட்டு விடுகிறது
சோம்பியிருக்காதே

எல்லாவிதமான தீய எண்ணங்களும்
மனதில் தோன்றும்

நீ யாரிடமும் எதையும் எதிர்பார்க்காமல்
இருந்தால் உன்னால்
அனைவரையும் சமமாக நேசிக்கமுடியும்

உனக்கு அமைதி வேண்டுமானால் பிறர்
குறைகளைப் பார்
பார்க்காதே அதற்குப் பதிலாக உன்
உலகம் முழுவதையுமே உனது சொந்தமாகி
கற்றுக்கொள்:

## அன்னையின் சிறப்புகள் :-

வீட்டில் தெய்வீகச் சூழல் நிலவியதால் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையையும் ஆன்மிகத்தையும் கற்றார். ஆன்மிக உரைகள், புராணக் கதைகளைக் கேட்டு வளர்ந்தார்.

"மன நிம்மதி வேண்டுமானால் பிறரிடம் குறை காணாதீர்கள். உங்கள் தவறுகளைப் பாருங்கள். மொத்த உலகையும் உங்கள் சொந்தமாக்கிக் கொண்டு பழகுங்கள். யாருமே அந்நியர் அல்ல". அனைவரும் என் குழந்தைகளே. மொத்த உலகமும் உங்கள் சொந்தம் என்று உபதேசித்தார்.

அனைவருக்கும் அன்பு, கருணை ஆகியவை வாரி வழங்கினார்.

## முடிவுரை :

வாய் சொல்லித் தம்பிக் நினைக்காதே
உண்மையைச் சொல்லி மாட்டிக் கொள்
ஏனென்றால் வாய் வலிக்காது
உண்மை சாகவிடாது.